**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.99/2023**

**நாள் : 05.02.2026**

**எ.ம.சா.** 2 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)-ம் ஆண்டின் 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரஞ்சித்குமார் | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.முனிசாமி | வயது | : | 28 |
| ஊர் | : | கிருஷ்ணகிரி | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | தேசியம் | : | இந்தியன் |

1) நான் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று 04.02.2026 தேதியிட்ட அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். அதிகாரமளிப்பு கடிதம் **எ.ம.சா.ஆ.8.,** மேற்படி அழைப்பாணையில் பணிக்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2) TN 02 AE 5445 என்ற மாருதி சுசுகி காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் எ.ம.சா.ஆ.9

3) TN 83 X 5301 என்ற Honda Activa வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் எ.ம.சா.ஆ.10

4) மேலும் அழைப்பாணையில் தேன்மொழி, க/பெ.ஜெயசீலன், வேலாவள்ளி கிராமம், வாளிப்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் ஆதார் எண் 541321573701 என்ற நபருக்கு வழங்கப்பட்ட இருசக்கர வாகன

ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இதுசம்பந்தமாக எங்களது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை தேடிப்பார்த்ததில் தேன்மொழி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இதுநாள் வரை வழங்கப்பட்டதாக தெரியவில்லை.
5) 21.01.2026 தேதியிட்ட தேன்மொழியின் ஓட்டுநர் உரிமம் சம்பந்தமான தேடல் கணிணி நகல் **எ.ம.சா.ஆ.11**

ஆனால் எ.ம.சா.ஆ.10 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வ.எண்.7ல் கண்டுள்ள ஓட்டுநர் உரிமம் சம்பந்தப்பட்ட இடத்தில் DL No. TN 27 19990002850 என்ற உரிமமானது TN 02 AE 5445 என்ற மாருதி காரின் உரிமையாளரும், ஓட்டுநருமான சீனிவாசன் என்பவரது ஓட்டுநர் உரிமமாகும். அது எ.ம.சா.ஆ.9 ஆய்வறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தவறுதலாக எ.ம.சா.ஆ.10 ஆய்வறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுவிட்டது. அந்த வகையில் தேன்மொழி என்பவருக்கு விபத்து நடந்த தேதியானது 17.05.2023ஆம் தேதியில் எங்களது அலுவலகத்தால் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை.
6) மாருதி கார் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் உண்மை நகல் **எ.ம.சா.ஆ.12** ஆகும். மேற்படி TN 02 AE 5445 என்ற மாருதி காருக்கு விபத்து நடந்த தேதியில் தகுதி சான்றானது காலாவதியாகியிருந்தது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையா என்பதை பொருத்து கணிணி சம்பந்தப்பட்ட ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2018ல் கணிணி மையமாக்கப்பட்டது. அதற்கு முநதைய ஆவணங்கள் கைப்பட எழுதப்பட்ட Manuar record என்றால் சரிதான். அவ்வாறு கைப்பட எழுதப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாருதி காரின் FC யானது 11.05.2023ஆம் தேதியில் காலாவதியானது என்றால் சரிதான். அவ்வாறு காலாவாதியானதற்கு பின்னிட்டும் அதனை புதுப்பிக்க 30 நாட்கள் grace period வழங்கப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

1ஆம் எதிர்மனுதாரரின் FC புதுப்பிக்க மனு கொடுத்தாரா? இல்லையா? என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக FC புதுப்பிக்க விண்ணப்ப படிவமானது சென்னை அலுவலகத்தில்தான் சமர்ப்பிக்கப்படும் என்றால் சரிதான். மாருதி காரானது முதல் முதலாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகன அலுவலரை கேட்டால்தான் FC புதுப்பிக்கப்பட்டதா, இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.